செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

# பாரத மொழிகளின் திருவிழா – 2024

## பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான

## கட்டுரை, கவிதைப் போட்டி

## அறிவிப்பு

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் கடந்த ஆண்டு "பாரத மொழிகளின் திருவிழா"வினை முன்னிட்டுத் தமிழியல் பொருண்மை சார்ந்த பல்வேறு கருத்தரங்குகள், பயிலரங்குகளை நடத்தியது. இந்த ஆண்டு மத்தியக் கல்வி அமைச்சகத்தின் வழிகாட்டுதலில் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குக் கட்டுரை, கவிதைப் போட்டிகளை நடத்த முனைந்துள்ளது.

தாய்மொழியைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், ஊக்குவிக்கவும், மொழி - பண்பாட்டுக் கலாச்சார மரபுகள் மற்றும் பன்முகத்தன்மை பற்றிய கூறுகளை அறிந்துகொள்ளவும், பல்வேறு மொழி பேசும் மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தவும் மத்தியக் கல்வி அமைச்சகம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

தேசத்தின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அவரவர் தாய்மொழியைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை நாட்டு மக்களுக்கு உணர்த்தவும், தாய்மொழியில் புலமைத் திறத்தை வளர்க்க வேண்டுமென்ற நோக்கில் மாணவர்களுக்காக இந்தக் கட்டுரை/கவிதைப் போட்டியைச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் நடத்துகிறது.

செம்மொழி நிறுவனம் தமிழின் தொன்மை, தனித்தன்மை, அவற்றின் மரபுத் தொடர்ச்சி ஆகியனவற்றைப் பேணிக்காத்துப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளமையால் அவற்றை வெளிப்படுத்தும் வகையில் கட்டுரை, கவிதைப் படைப்புகள் அமையப்பெற வேண்டுமென்பது போட்டிகளுக்குரிய பொதுவிதியாகக் கொள்ளப்படுகிறது.

- ❖ கட்டுரை, கவிதை ஆகிய இரண்டு பிரிவுகளுக்குப் போட்டிகள் அறிவிக்கப்படுகின்றன. அவைகளின் விவரம் கீழ்வருமாறு:

கட்டுரை

| வ.எ. | வகுப்பு | | தலைப்பு |
|---|---|---|---|
| 1. | பள்ளி மாணவர்கள் | 6 - 9ஆம் வகுப்பு | பாருக்குள்ளே நல்ல நாடு, நம் பாரத நாடு |
| | | 10 - 12ஆம் வகுப்பு | தீதும் நன்றும் பிறர்தர வாரா |
| 2. | கல்லூரி மாணவர்கள் | இளங்கலை/முதுகலை | வள்ளுவர் உணர்த்தும் அறம் |

கவிதை

| வ.எ. | வகுப்பு | | தலைப்பு |
|---|---|---|---|
| 1. | பள்ளி மாணவர்கள் | 6 - 9ஆம் வகுப்பு | மெய்ப்பொருள் |
| | | 10 - 12ஆம் வகுப்பு | செவிச்செல்வம் |
| 2. | கல்லூரி மாணவர்கள் | இளங்கலை/முதுகலை | பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் |

**போட்டிகளுக்கான விதிமுறைகளும் விவரங்களும் வருமாறு:**

- பள்ளி, கல்லூரி மாணவர்கள் மட்டுமே போட்டிகளில் பங்கேற்க வேண்டும்.
- கட்டுரை 10 பக்கத்திற்கும், கவிதை 30 அடிகளுக்கும் மிகாமல் இருக்க வேண்டும்.
- தமிழ் மொழியில் மட்டுமே கவிதை/கட்டுரை அமையப்பெற்றிருக்க வேண்டும்.
- தட்டச்சு செய்யாமல் கையெழுத்துப் படியாக அனுப்பிவைக்க வேண்டும்.
- ஒருவர் ஏதாவது ஒரு பிரிவில் மட்டுமே பங்கேற்க வேண்டும்.
- கட்டுரை/கவிதையினைப் பள்ளித் தலைமையாசிரியர்/கல்லூரி முதல்வர்/துறைத் தலைவர்/ நிறுவன இயக்குநர் ஒப்புதலுடன் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.
- உரியமுறையில் வரப்பெறாத கட்டுரை/கவிதை ஏற்கப்படமாட்டாது.
- ஒவ்வொரு பிரிவிலும் தலா மூன்று பேருக்குப் பரிசுகள் வழங்கப்படும்.
- முதல் பரிசு ரூ. 30,000/-, இரண்டாம் பரிசு ரூ. 20,000/-, மூன்றாம் பரிசு ரூ. 10,000/-
- கட்டுரை/கவிதை வந்துசேர வேண்டிய இறுதி நாள்: 23.11.2024
- எக்காரணத்தைக் கொண்டும் போட்டிகள் தொடர்பாகச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கு நேரில் வரவோ, தொலைபேசி வழியாகத் தொடர்புகொள்ளவோ கூடாது.
- படைப்புகளை அஞ்சலில் மட்டுமே அனுப்பிவைக்கப்பட வேண்டும்.
- அனுப்பிவைக்க வேண்டிய முகவரி: **இயக்குநர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600 100.**

**(இயக்குநர்)**